# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2022

ஆண்டு: 9 திகதி: 26.11.22

நேரம்: 2-30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: ச.தேவராசா

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 10 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.

1. படி (பெயர்)

______________________________________________

______________________________________________

படி (வினை)

______________________________________________

______________________________________________

2 நகை (பெயர்)

______________________________________________

______________________________________________

நகை (வினை)

______________________________________________

______________________________________________

2. புளி (பெயர்)

______________________________________________

______________________________________________

புளி (வினை)

______________________________________________

______________________________________________

3. மதி (பெயர்)

_______________________________________________

_______________________________________________

மதி (வினை)

_______________________________________________

_______________________________________________

5 தை (பெயர்)

_______________________________________________

_______________________________________________

தை (வினை)

_______________________________________________

_______________________________________________

6 மலர் (பெயர்)

_______________________________________________

_______________________________________________

மலர் (வினை)

_______________________________________________

_______________________________________________

7 விதை (பெயர்)

விதை (வினை)

8 முறை (பெயர்)

முறை (வினை)

9 கரை (பெயர்)

கரை (வினை)

10 ஊர் (பெயர்)

______________________________________________________________

______________________________________________________________

ஊர் (வினை)

______________________________________________________________

______________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

வினா 2 பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இறைவன் உலகத்தைப் படைத்தான். உலகத்தைப் படைத்தபின் உலகத்தில் மக்கள் வாழ்வதற்காக மரம், செடி, கொடிகள், ஆறு, ஏரி, குளம் போன்ற நீர் நிலைகள் என்பவற்றையும் உருவாக்கினார். பின்பு மக்களைப் படைத்தார், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய முக்கனிகளையும் வேறுபல இனிமையான கனிகளையும் உருவாக்கினார். பல்வேறு மிருகங்களையும் படைத்தார். இறைவன் படைத்தவற்றை வைத்து மனிதன் தன்து முயற்சியினால் தனக்குத் தேவையான் உணவு, உடை, உறைவிடம் என்பவற்றைப் பெற்றான். இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் அந்த இறைவன் உருவத்தை உருவாக்குவதற்காக உலோகங்களையும் நிலத்துக்கடியில் படைத்தார். கடவுள் சிலைகளைச் செய்கின்ற ஐந்து உலோகங்கள் ஐம்பொன் என்று அழைக்கப்படுகின்றன. இரும்பு, செம்பு, தங்கம், வெள்ளி, ஈயம் என்பனவே ஐம்பொன்னில் அடங்குகின்றன. அவற்றைத் தேவையான அளவில் எடுத்து உருக்கிச் சிற்பிகள் சிலைகளாக வார்க்கின்றனர். இது மனிதன் இறைவனுக்குச் செய்கின்ற நன்றிக் கடனாகும்.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து ஆடம்பரமாக வாழவேண்டும் என்பதற்காக விலையுயர்ந்த நவரத்தினங்களை உருவாக்கினார். நவம் என்பதன் பொருள் ஒன்பது. முத்து, வைரம், வைடூரியம், மாணிக்கம், நீலம், மரகதம், புஷ்பராகம், பவளம், கோமேதகம் என்பனவே நவரத்தினங்களாகும். இவற்றில் முத்து, பவளம் என்பன கடலிலும், ஏனையவை நிலதிற்கடியிலும் உருவாகின்றன. கடலில் உருவாகின்ற சிப்பிகளில் முத்துக்கள் விளைகின்றன. கடலில் பாறைகளில் பவளக்கொடிகள் வளர்கின்றன. மக்கள் தமது விருப்பத்திற்கேற்ப நவரத்தினங்களை ஆபரணங்களில் பதித்து அணிகின்றனர்.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் தனது 96ஆவது வயதில் இறந்த பிரித்தானிய மகாராணி எலிசபெத் அணிந்தமுடியில் சுமார் 2800 வைரக்கற்கள் பதிக்கப்படுள்ளதாகக் கூறுகின்றனர். பிரித்தானியர்கள் 270 வருடங்களுக்கு முன்பு இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற கோஹினூர் வைரம் அந்த முடியில் பதிக்கப்பட்ட சிறந்த வைரமாகும். அதன் தற்போதைய பெறுமதி 510 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். பலம் வாய்ந்த கடற்படையைக் வைத்திருந்த பிரித்தானியர் இந்தியாவை மட்டுமல்ல உலகின் பலநாடுகளையும் கைப்பற்றி ஆட்சி செய்தனர். அங்கிருந்த செல்வங்களைத் தமது நாட்டிற்கு அள்ளிச்சென்றனர். இந்த வகையில் எலிசபெத் மகாராணியாரின் செங்கோலில் பதிக்கப்பட்ட கலினன் வைரம் தென்னாபிரிக்காவிலிருந்து கொண்டு செல்லப்பட்டதாகும். இதன் பெறுமதி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என்று கூறுகின்றனர். இந்தியா இலங்கை ஆகிய நாடுகளை 150 வருடங்களுக்கு மேல் பிரித்தானியர் ஆட்சி செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தியா 1947 ஆம் ஆண்டிலும், இலங்கை 1948 ஆம் ஆண்டிலும் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் அடைந்தன.

பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளியை நிரப்புக.

| | |
|---|---|
| முக்கனி | |
| ஐம்பொன் | |
| நவரத்தினம் | |
| கடல் தரும்<br>2 இரத்தினங்கள் | |
| எலிசபெத்<br>ராணியின்<br>கீரிடத்தில் உள்ள<br>சிறந்த வைரம் | |

(5 புள்ளிகள்)

2 இறைவனின் படைப்புக்களில் இந்த உரைப்பகுதியில் கூறப்பட்டவனவற்றை அடிப்படையாக வைத்து ஐந்தாக வரிசைப்படுத்துக.

1

2

3

4

5

(5 புள்ளிகள்)

3 உலகத்தையும், மக்களையும், மக்கள் வளமாக வாழ்வதற்குத் தேவையான எல்லாவற்றையும் படைத்த இறைவனுக்கு நீங்கள் எவ்வாறு நன்றிக் கடன் செலுத்துகிறீர்கள்?

(5 புள்ளிகள்)

4 பிரித்தானியர் தமது நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள நாடுகளைக் கைப்பற்றி நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆட்சி செய்தமைக்கான காரணங்கள் எவை? என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

(5 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

சிட்னி இயல், இசை, நாடக மன்றத்தின் வெள்ளி விழா பிளாக் ரவுண், போமன் மண்டபத்தில் நடைபெற்றது. வெள்ளி விழாவுக்கான நான்கு அனுமதிச் சீட்டுக்களை அப்பாவுக்கு மன்ற உறுப்பினர்கள் விற்பனை செய்தனர். எனவே அப்பா, அம்மா, தம்பி, நான் நால்வரும் விழாவுக்குச் சென்றோம். தமிழ் மொழி வாழ்த்துடன் விழா ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து பாடல், நடனம், நாடகம் என்பன நடைபெற்றன. இடைவேளை விடப்படுவதற்கு முன்பு **"அடுத்ததாக இருபது நிமிட நேர இடைவேளை விடப்படும். இடைவேளையின் போது சிறுவர்கள் அதிஷ்டச் சீட்டுகளை விற்பனை செய்வார்கள். ஒரு அதிஷ்டச் சீட்டின் விலை 5 டொலர்கள். முதலாவது பரிசு கனடா சென்று திரும்புவதற்கான நான்கு விமானப் பயணச் சீட்டுகள் தமிழ் வர்த்தக நிறுவனம் ஒன்று அந்த விமானப் பயணச்சீட்டுக்களை அன்பளிப்புச் செய்துள்ளது என்று பெண் ஒருவர் அறிவிப்புச் செய்தார்."** சிற்றுண்டி வாங்கி உண்பதற்காக அப்பா எனக்கு 10 டொலர்கள் தந்தார். நான் 5 டொலர்களுக்கு சிற்றுண்டி வாங்கி சாப்பிட்டு விட்டு மிகுதி 5 டொலருக்கு ஒரு அதிஷ்டச் சீட்டை வாங்கினேன். நிகழ்ச்சிகள் முடிந்த பின்பு அதிஷ்டச் சீட்டுகளைக் குலுக்கி முதலாவது பரிசு பெற்ற சீட்டை எடுத்து அதன் இலக்கத்தை அறிவித்தனர். நான் வாங்கிய சீட்டை எடுத்துப் பார்த்தேன். என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை. என்ன ஆச்சரியம்? எனக்கு முதல் பரிசு கிடைத்தது. அளவற்ற மகிழ்ச்சியுடன் அப்பா, அம்மா, தம்பி ஆகியோருக்குக் கூறிவிட்டு விமானப் பயணச்சீட்டுகளை வாங்குவதற்காக மேடையை நோக்கி ஓடினேன்..................

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தொடர் வாக்கியத்திலிருந்து 15 தனிவாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.

அன்று சனிக்கிழமை காலையில் அம்மா என்னைத் தூக்கம் கலைத்து எழும்புமாறு கூற நான் கொட்டாவி விட்டவாறு படுக்கையை விட்டு எழுந்து குளியலறைக்குச் சென்று குளித்த பின் அம்மா சுடச் சுடப் பரிமாறிய தோசையை ஆசையோடு சாப்பிட்ட பிறகு ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு செல்வதற்கான ஆயத்தங்களைச் செய்ததைத் தொடர்ந்து தமிழ்ப் பள்ளியை நோக்கி நடந்து சென்றபோது மாணவர்கள் தமிழ் மொழி வாழ்த்துப் பாடும் சத்தம் கேட்டு கைக் கடிகாரத்தைப் பார்த்தபோது அது 10.35 மணியைக் காட்ட வேகமாக நடந்து சென்று கல்வி நிலையக் கீதத்தைப் பாடிய பின்பு வகுப்பறையில் பாடங்களைப் படித்து இடைவேளையின் போது பந்து விளையாடிய பிற்பாடு ஆசிரியர் கூறிய கட்டுரையை எழுதி முடித்ததைத் தொடர்ந்து வீட்டில் மதிய உணவு உண்டு மாலையில் பேர்வூட் திரையரங்கில் அம்மா, அப்பா, தங்கையுடன் பொன்னியின் செல்வன் படத்தைப் பார்த்து மகிழ்ந்தேன்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையத்தின் செயலாளராக உங்களைக் கருதிக் கொள்ளுங்கள். எதிர்வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள வருடாந்த பரிசளிப்பு விழாவும், இராப்போசன விருந்தும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஸ்ரத்பீலட் நாடளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜேசன் லீ அவர்களுக்கு ஜெசன்.லீ@ஜீ.மெயில்.கொம் என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 13 |
|---|---|---|---|---|---|

பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

1 தந்தையர் தினம்
2 என் வாழ்வில் மறக்கமுடியாத வெளிநாட்டுப் பயணம்.
3 அன்று வானம் நீல நிறமாக, இடையிடையே வெண்மேகங்களுடன் அழகாகச் காணப்பட்து. அண்ணாந்து பார்த்து அதன் அழகை ரசித்த போது பல வர்ணப் பறவைகள் கூட்டமாகப் பறந்து செல்வதை அவதானித்தேன். நானும் அப் பறவைகளில் ஒன்றாக மாறினால் என்ன என்று எண்ணினேன். என்ன ஆச்சரியம்? உடனே நானும் ஒரு பறவையாக மாறி வான வெளியில் சிறகடித்துப் பறந்தேன்……………….
35 வரிகள் விடவும்